786
919

273

அனுப்புநர்

உறுப்பினர்-செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்
குழுமம்,
எண்.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.

பெறுநர்

ஆணையாளர்,
சென்னை மாநகராட்சி,
சென்னை-600 003.

---

கடித எண். பி1/25308/06 நாள்: 18-09-2007.

~~ஐயா~~/அம்மையீர்,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – திட்ட அனுமதி – நில அளவை எண். 3901/61, பகுதி எண் 85, மைலாப்பூர் கிராமம், ~~கதவு எண்.~~ பழைய கதவு எண் 8, புதிய எண் 17 ~~சாலை/தெரு/சந்து~~ ஆர்ச்பிஷப் மாத்தியஸ் அவென்யு சாலை சென்னை 28 இல் ~~அடித்தளம் +~~ வாகன நிறுத்துத் மற்றும் ~~தளம் + தரைத்தளம் + இடைத்தளம்~~ நான்கு தளங்கள் கொண்ட நான்கு குடியிருப்பு/~~வணிகக்~~ கட்டிடம் ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை: 1. சிறப்புக் கட்டிடப்பிரிவு/~~விரைவுப்பிரிவு~~ எண். 1321/2006 இல் 11.12.2006 அன்று பெறப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. திருத்திய வரைபடம் பெறப்பட்ட நாள் 22.6.07
3. இவ்வலுவலக கடிதம் ~~...~~ நாள் 28.8.2007
4. ஒப்புதல் கடிதம் பெறப்பட்ட நாள் 13.9.2007

...

நில அளவை எண். 3901/61, பகுதி எண் 85, மைலாப்பூர் கிராமம் பழைய கதவு எண். 8, புதிய எண் 17, மைலாப்பூர் பழைய கதவு எண் 8, புதிய எண் 17, ஆர்ச்பிஷப் மாத்தியஸ் அவென்யு சாலை/~~தெரு/சந்து~~ சென்னை 28 இல் ~~அடித்தளம் +~~ வாகன நிறுத்துத்தளம் மற்றும் நான்கு ~~தரைத்தளம் + இடைத்தளம்~~ தளங்கள் கொண்ட நான்கு குடியிருப்புகள் ~~/வணிகக் கட்டிடம்~~ குடியிருப்பு~~கள் மற்றும் வணிக~~ உபயோகம் கொண்ட கட்டிடத்தைக் கட்டுவதற்கு, பார்வை-1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் பார்வை-3 இல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

மேலும் அரசாணை எண். 191 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 01-06-2007 க்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள நீதிப் பேராணை மனு எண். 20587/2007 மற்றும் பிற வழக்குகளின் முடிவிற்கேற்ப உள் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் வசூலிக்கப்படும் என்ற கூடுதல் நிபந்தனையின் பேரிலும் ஒப்பளிக்கப்படுகிறது. அவ்வாறு உள் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணத்தைச் செலுத்தக் கோரும் கடிதம் கிடைத்த 15 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் இத்திட்ட அனுமதி இரத்து செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

DESPATCHED
20/9/19

2. விண்ணப்பதாரர் பார்வை 4 இல் கண்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு, ரசீது எண். 3178 & 318 நாள் 11.9.07 இல் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்.

| | |
|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | : ரூ. 20,000 |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | : ரூ. 700 |
| வரன்முறைக் கட்டணம் | : ரூ. 65,000 |
| திறந்தவெளிக் கட்டணம் | : ரூ. இல்லை |
| கட்டிடத்திற்கான காப்புநிதிக் கட்டணம் | : ரூ. 80,000 |
| கழிவு நீர்த்தொட்டிக்கான காப்புநிதிக் கட்டணம் | : ரூ. இல்லை |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | : ரூ. 10,000 |
| மொத்தம் | ரூ. 1,75,700 |

இவ்விண்ணப்பதாரர் சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து பார்வை இல் கண்டுள்ள நீதிப் பேராணை பெற்று, காப்புநிதிக் கட்டணங்களுக்குப் பதிலாக ரூ. (ரூபாய் ) -க்கு வங்கியிலிருந்து வரை செல்லுபடியாகும் வங்கி உத்திரவாதத்தை அளித்திருக்கிறார்.

3. அ) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான கட்டணத்திற்காக, மேலாண்மை இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்" என்ற பெயரில் எடுக்கப்பட்ட ரூ.1,01,600 (ரூபாய் ஒரு லட்சத்து ஒர் ஆயிரத்து அறுநூறு மட்டும்) -க்கான வரைவோலையை விண்ணப்பதாரர் தனது 13.9.2007 நாள் கடிதத்துடன் கொடுத்துள்ளார்.

ஆ) கழிவு நீரகற்று அமைப்பைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியத்திடம் முறையான விண்ணப்பத்தை நேரடியாகச் சமர்ப்பித்து, உரிய அனுமதியைப் பெற்ற பின்தான், வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இ) குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியம் குடிக்கவும் சமையலுக்காகவும் மட்டுமே நீர் வழங்க இயலும். வழங்கப்படும் நீரின் அளவும் ஒரு குடியிருப்பிற்கு அதிகப்பட்சமாக 5 பேருக்கும், ஒருவருக்கு ஒரு நாளைக்கு 10 லிட்டர் அளவிற்குமே இருக்கும். வேறு உபயோகங்களுக்குத் தேவையான நீருக்காக கட்டிடம் கட்டுபவரே வேறு ஏற்பாடுகளை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கு ஒப்புதல் பெற்ற பிறகு, குடிநீர் இணைப்பிற்காக விண்ணப்பிக்க

வேண்டும். இணைப்பிற்கான அனுமதி கிடைத்தபின் தான் குழாய் அமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்துக் கிணறுகளும், மேல்நிலைத் தொட்டிகளும், கழிவுநீர்த் தொட்டிகளும், கொசுத் தொல்லைகள் இல்லாவண்ணம் சுகாதாரமுறையில் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

4, ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ளபடி மழைநீர் சேகரிப்பு அமைப்பைத் திருப்திகரமாக அமைக்காதிருப்பது, ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்திலிருந்தும், வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கும் மீறிய செயலாகக் கருதப்படும், அதன்மீது அமலாக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

5. எஸ்.பி/சிறப்புக் கட்டிடம்/337/2007 நாள் 18-09-2007 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள்/வரைபடங்களின் தொகுதிகள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 18 09.2007 இருந்து 17-09-2010 வரை செல்லுபடியாகும்.

6. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு விண்ணப்பதாரர் சென்னை மாநகராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

7. கட்டிடம் கட்டுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

18/9/07

2/5

உறுப்பினர்-செயலருக்காக.

17/9/07

இணைப்பு: 1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

நகல்: 1. ~~திரு~~ திருமதி எ. மீனாட்சி
பழைய கதவு எண் 8, புதிய எண் 17,
ஆர்ச் பிஷப் மத்தியாஸ் அவின்யூ,
ராஜா அண்ணாமலை புரம்
சென்னை-28.

2. உறுப்பினர்,
உரியஅதிகாரம் ( Appropriate Authority),
108, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

3. வருமானவரி ஆணையர்,
168, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

4. தலைமைத் திட்ட அமைப்பாளர்,
செயலாக்கப் பிரிவு,
செ.பெ.வ.குழுமம், சென்னை-600 008.